பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 13 | செவ்வாய்க்கிழமை | 28.07.2020 | கதிர் 132

# சரியான நேரம் கூட்டமைப்பை புலிகள் கட்டாயம் கையேற்பர்!

## ஜனநாயகப் போராளிகள் அறிவிப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 29

சரியானதொரு காலம் வரும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலி உறுப்பினர்கள் பொறுப்பேற்பார்கள். அதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். அதுவரைக்கும், அதற்குப் பின்னரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமடைய வேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. துளசி.

2

## படகு கவிழ்ந்து மீனவர் மாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பரப்பில் மீன்பிடிப் படகு ஒன்று கவிழ்ந்ததில் தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களில் ஒருவர் பத்திரமாக மீட்கப்பட்டார். மற்றொருவரைக் காணவில்லை. அவரைத் தேடும் பணியில் கடற்படையினர், மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

2

## வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, ஜூலை 28

வவுனியா - பறண்நட்டகல் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து இன்று ஓமந்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும், ஓமந்தையில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

2

## யாழில் ஒருவருக்கு தொற்று

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.போதனா வைத்தியாலையில் கடந்த 25ஆம் திகதி 2ஆவது தடவையாக அனுமதிக்கப்பட்டு 7ஆம் இலக்க விடுதியில் தனிமைப்படுத்தல் அறையில் வைக்கப்பட்டிருந்தவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

எனினும் அவருக்கு குறைந்தளவு தொற்றே ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் அவருடன் பழகிய வைத்தியசாலை ஊழியர்கள் 4 பேர் அடையாளம் காணப்பட்டு

2

## கெலிஓயா விபத்தில் மூவர் சாவு

கொழும்பு, ஜூலை 28

பேராதனை - கம்பளை வீதியின் கெலிஓயா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தம்பதியினர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெலம்பொடை பகுதியைச் சேர்ந்த தம்பதியினரும் கெலிஓயாவைச் சேர்ந்த 54 வயதான ஒருவரும் சம்பவத்தில்

2

## கொரோனாவிலிருந்து 2,296 பேர் குணமடைவு

### தற்போது சிகிச்சையில் 498 பேர்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்று வந்த 175 பேர் கடந்த 24 மணித்தியாலங்களில் குணமடைந்துள்ளனர்.

இதுவரை ஒரே தடவையில் குணமடைந்த அதிகளவானோர் தற்போது பதிவாகியுள்ளது.

நேற்று 23 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இலங்கையில் 2,078 ஆவது நபராக அடையாளம் காணப்பட்ட போதைப்பொருளுக்கு அடிமையான கைதியை அடுத்து, கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலும்

2















தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் - The Distinctive Voice of The Tamil Speaking People

## யாழில் ஒருவருக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுடைய வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு 31ஆம் திகதி பரிசோதனை நடத்தப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி.

இன்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவா மேற்கண்டவாறு கூறினார். அவா மேலும் கூறுகையில் -

கடந்த 7ஆம் திகதி சவுதி அரேபியாவில் இருந்து வந்த 208 பேருடன் தங்கியிருந்தவர் 22ஆம்திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில்தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அன்றைய தினம் மாலையே 7ஆம் விடுதியில் உள்ள தனிமைப்படுத்தல் அறைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை வழுங்கப்பட்டு மீண்டும் விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். மீண்டும் 25 ஆம் திகதி சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். இதற்கமைய நேற்று மாலை நடத்தப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனினும் அவருக்கு தொற்று குறைந்தளவிலேயே உள்ளது. இதற்கமைய யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணாகள் குழு கூடி ஆழமாக இந்த விடயத்தை ஆராய்ந்துள்ளதுடன், இந்த நபர் வைத்தியசாலையில் தங்கியிருந்த காலப்பகுதியில் வேறு யாருடனும் நேரடியாக தொடர்புகளை பேணினாரா என்பதை ஆராய்ந்துள்ளோம். இதற்கமைய அந்த நபா தங்கியிருந்த விடுதியிலும், தனிமைப்படுத்தல் விடுதியிலும் பணியாற்றிய 4 உத்தியோகத்தாகளுக்கு கொரோனா தொற்று ஏற்படுவதற்கான குறைந்தளவு சந்தர்ப்பம் உள்ளதென்ற அடிப்படையில் அவாகள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பாசோதனைகள் எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளன.

வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் பாதுகாப்பு அங்கிகள், முக கவசங்கள் பயன்படுத்தப்பட்டே அந்த நபர் பரிசோதிக்கப்பட்டுள்ளார். இதேபோல் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வந்தவர் என்ற அடிப்படையில் கையுறை, முக கவசம் அணிந்துள்ளதுடன், சமூக இடைவெளியையும் பேணியிருக்கின்றனர். ஆகவே யாழ்.போதனா வைத்திசாலையில் உள்ள மற்றவர்களுக்கோ, ஊழியாகளுக்கோ தொற்று ஏற்பட வாய்ப்பு இல்லை. எனினும் இந்த நோய் பரவும் வேகம் தீவிரமானது என்பதால் நாம் மிக அவதானமாக உள்ளோம் - என்றார்.

## வவுனியா விபத்தில்....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில், அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தங்கராஜா பால்ராஜ் (வயது -60) என்பவரே உயிரிழந்தார்.

இந்த விபத்தில் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் குடை சாய்ந்துள்ளது. அதன் சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

## படகு கவிழ்ந்து ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடராட்சி கிழக்கு, கட்டைக்காடு கடற்பரப்பில் இன்று அதிகாலை படக்கு ஒன்றில் இரண்டு மீனர்கள் தொழிலுக்குச் சென்றனர். கடலில் ஏற்பட்ட பலத்த காற்றினால் அவர்கள் சென்ற படகு கவிழ்ந்துள்ளது. இதனால் கடலில் தந்தளித்த அவர்களை மீட்க மீனவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் ஒருவர் பத்திரமாக மீட்கப்பட்டார். அவர் கரைக்கு கொண்டுவரப்பட்டார். கவிழ்ந்த படகும் கரைக்கு கொண்டுவரப்பட்டது. மற்றைய மீனவர் காணாமற்போயுள்ள நிலையில் அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## கொரோனாவிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனுடன் தொடர்புபட்டவர்களுமாக இதுவரை 598 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று கந்தக்காடு சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய 17 பேர் அடையாளம் காணப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் மாத்திரம் இதுவரை 548 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று முற்பகல் 10 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப் பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2,782 இலிருந்து 2,805 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,121 இலிருந்து 2,296 ஆகக் காணப்படுகின்றது.

நேற்று கட்டாரிலிருந்து வந்த 5 பேர், சேனபுர தனிமைப்படுத்தல் நிலையத்தில் புனர்வாழ்வு பெறும் 17 பேர், சவூதி அரேபயியாவிலிருந்து வந்த ஒருவர் ஆகிய தனிமைப்படுத்தப்பட்டிருந்த 23 பேரே அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதுவரை அடையாளம் காணப்பட்ட 2,805 தொற்றாளர்களில், வெளிநாட்டவர் 31 பேர், வெளிநாடுகளிலிருந்து வந்த இலங்கையர் 913 பேர், கடற்படையினர் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய 950 பேர், கந்தக்காடு புனர்வாழ்வு மையத்துடன் தொடர்புடைய 598 பேர் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 313 பேர் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள 2,805 பேரில் தற்போது 498 நோயாளிகள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 11 பேர் மரணமடைந்துள்ளனர். இதேவேளை, மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 65 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## கெலிஓயா விபத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கெலிஓயா நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிள் ஒன்றுடன் மோதுண்ட பாதசாரி, பின்னால் வந்த ஓட்டோவிலும் மோதி விபத்துக்குள்ளாகினார். இதனைத் தொடர்ந்து, அந்த ஓட்டோ வீதியில் நிறுத்தப்பட்டிருந்த காருடன் மோதிக் குடை சாய்ந்தது. இந்த விபத்தில், மோட்டார் சைக்கிள் ஓட்டி, பாதசாரி மற்றும் ஓட்டோவில் பயணித்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு ஓட்டோவில் பயணித்த இருவரும் பாதசாரியும் உயிரிழந்துள்ளனர்.

## சரியான நேரம் கூட்டமைப்பை ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் இன்று இடம்பெற்ற ஊடகவியராளர் சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்கள் இன்று தமது தனித்துவத்தை இழந்து, பயணித்துக்கொண்டிருக்கின்றோம். தற்போது வந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ அரசு, தமிழர்களுக்கு ஆற்றியிருக்கின்ற பணிகளின் நிமித்தம், தமிழர்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தரவேண்டிய கடப்பாடு கோட்டாபய அரசுக்கு இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்க மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்குவதற்குச் சிங்கள தேசம் நினைத்துள்ளது. அதன்பிரகாரம் தான், முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் வெளியில் வந்து நிற்கின்றார்.

தொடர்ந்தும் தமிழர்கள் தோல்வியடைய முடியாது. நீங்கள் மிகக் கவனமாக முடிவெடுங்கள். நாங்கள் இந்த மண்ணுக்காக போராடியவர்கள். ஒற்றுமையாக வாக்களியுங்கள்.

தமிழ்த்தேசியமக்கள்முன்னணிக்கு சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகரசபைகளை மக்கள் ஆணையாக வழுங்கியிருந்தார்கள். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் வெல்லமாட்டீர்கள். உங்களை நம்பி உங்கள் பின்னால் உள்ள இளைஞர்களுக்கு நாங்கள் இந்த கருத்தைச் சொல்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் கோட்டாபய மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இருக்கப் போகின்றனர். சில சமயம் நீங்கள் வெற்றி பெற்றால், உங்களின் கதிரையை வெளியில் கொண்டுவந்தா போட்டுவிட்டு இருக்கப் போகின்றீர்கள்?

தயவு செய்து மக்களின் வாக்குப் பலத்தை திசை திருப்பும் வேலையை நீங்கள் செய்ய வேண்டாம். கடந்த காலங்களில் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்துக்கு வழுங்கப்பட்ட பணி என்ன?

வெள்ளைக்கொடி விவகாரம் பற்றி இன்று வெளியில் வந்து விடுதலைப் புலிகள் உங்களுடன் இருந்ததாகச் சொல்கின்றீர்கள். நீங்கள் எவற்றைக் கதைத்தீர்கள் என்பது எமக்குத் தெரியும். நாங்கள் உங்களுடன் என்னத்தைக் கதைத்தோம் என்று உங்களுக்கும் தெரியும். நாங்கள் உங்களுடன் கதைத்திருக்கின்றோம் என்றால், நாங்கள் யுத்தத்தின் இறுதியில் சம்பந்தனுடன் கதைத்திருக்கமாட்டோம் என்று எவ்வாறு சொல்கின்றீர்கள். யுத்தம் முடிவடைந்துவிட்டது. விடுதலைப் புலிகள் சார்பாக நாங்கள் அதைச் சொல்கின்றோம்.

தமிழர்கள் தனித்துவமான இனம். தமிழர்களுக்கு யார் தலைவராவது என்பதே இங்குள்ள பிரச்சினை. தலைவர் பிரகாரனின் பின்னர், யார் அந்த முடியைச் சூடுவது என்பதே இங்குள்ள பிரச்சினை. ஒரு வருடத்தின் பின்னர், கஜேந்திரகுமார் நான்தான் தலைவர் என்று தனது தலையைக் காட்டினார். அதற்கும் தகுதி வேண்டும். தலைவர் ஆக வேண்டுமாயின், தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கும்போது, தலைவர் கஜேந்திர குமாரை தலைவர் ஆக்கியிருப்பார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அடுத்ததாக நீதியரசராக இருந்த ஒரு மனிதரை நம்பிக்கொண்டு வந்தார். அவர் அப்போதுதான், யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அதற்கு முன்னர் கோவில் கும்பிட வந்து போன ஒருவர்தான் சி.வி.விக்னேஸ்வரன்.

தம்பி பிரபாகரன் என்றே சொல்வார் சி.வி.விக்னேஸ்வரன், தலைவர் பிரபாகரன் என்று சொல்லமாட்டார். கஜேந்திர குமார் மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் இருவரும் ஒரு நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றார்கள். யார் தலைவர் ஆகுவதென்று ஒரு போட்டி காணப்படுகின்றது.

தலைவர் ஆகுவதற்கு சில தகுதிகள் உள்ளன. சரியானதொரு காலம் வரும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலி உறுப்பினர்கள் பெற்றுக்கொள்வார்கள். அதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். அதுவரைக்கும், அதற்குப் பின்னரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமடைய வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்

- உதவி ஆசிரியர்
- ஒப்பு நோக்கர்கள்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எண்ணிக்கையை விட ஆளுமையே மிக முக்கியம்

"பயமின்றிப் பொறுப்பை ஒப்படைக்கக் கூடிய ஆற்றல் மிகுந்த தலைவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள்."

நுவரெலியா றாகலை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகயில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் கருத்து அவரது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும், தென்னிலங்கைக்கும் மட்டும் உரியதன்று.

தமிழர் தரப்புக்கும் இதுவே முக்கியமானது. ஆனால் தமிழர் அரசியல் சூழமைவு இந்தக் கருத்தில் உள்ள ஆழம் – அர்த்தம் – புரியாமல் வேறு எதை எதையோ பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றது.

பெரும்பாலும் தமிழ் அரசியல் தலைவர்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பக் கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றியே பிரஸ்தாபிக்கின்றனர்.

ஆனால், இந்த முறை அமையப் போகும் நாடாளுமன்றத்தில் தமிழர்களைப் பொறுத்தவரை அதை விட வேறு ஒரு விடயம் முக்கியமானதாக இருக்கப் போகின்றது என்பதைத் திரும்பத் திரும்ப இப்பத்தியில் சுட்டிக் காட்டுகின்றோம்.

1977 பொதுத் தேர்தலில் ஒட்டுமொத்தத் தமிழினமும் தனித் தமிழீழத்துக்கு ஆணை கொடுத்தது. அப்போது தமிழர் தேசம் முழுவதும் ஒரே குரலில் ஏகோபித்த முடிவை வெளிப்படுத்த வேண்டும் என நம் தலைவர்கள் கோரினார். அப்போது எண்ணிக்கை முக்கியமாக இருந்தது. தமிழர் தேசத்தின் முழு நாடாளுமன்றத் தொகுதிகளையும் கைப்பற்றி, இனத்தின் ஆணையை ஒட்டுமொத்தமாக சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அதனைத் தமிழினம் செய்தும் காட்டியது. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தொகுதிகள் அனைதிலும் – கல்குடாத் தொகுதி தவிர்ந்த சகலவற்றிலும் – தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றிவாகை சூடியது. அந்த வெற்றியினால் கிட்டிய ஆசன எண்ணிக்கை, எதிர்கட்சித் தலைவர் பதவியையும் தமிழருக்கு வழங்கியது.

அதே போல கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்திலும் தமிழர் தரப்புக்கு – தமிழ்த் தேசிக் கூட்டமைப்புக்கு – ஆசன எண்ணிக்கைக் கணக்கு பலம் தருவதாக அமைந்தது.

ஆரம்பத்தில் இரண்டு பெரிய சிங்களத் தேசியக் கட்சிகளும் இணைந்து நல்லாட்சி அரசை ஸ்தாபித்த போது அதில் எதிர் கட்சித் தலைவர் பதவியும் –

அவை இரண்டும் முரண்பட்டும் தமக்குள் பிளவுபட்டு நின்ற போது அரசைத் தீர்மானிக்கும் வலுவும் –

தமிழர் தரப்புக் கிடைத்தது.

ஆனால், ஒகஸ்ட் 7 இல் வரப்போகின்ற அரசில் இப்படி ஆசன எண்ணிக்கையை வைத்து வலிமை காட்டும் சூழல், தமிழர் தரப்புக்குக் கிட்டவே மாட்டாது என்பதுதான் நோக்கர்களின் கணிப்பும் மதிப்பீடும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிக வலிமையான அரசை அமைக்கும். பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.கவும், ஐக்கிய மக்கள் சக்தியும் தங்களுக்குள் கணிசமாக ஆசனங்களைப் பங்கிட்டுக் கொள்ளும்.

தமிழர் பக்கத்தில் ஒரு தரப்பு பத்து முதல் இருபது ஆசனங்களின் எத்தனையை எடுத்தாலும் – கைப்பறினாலும் – அது பெரும் அரசியல் தாக்கத்தையோ, மாற்றத்தையோ ஏற்படுத்தப் போவதாக இருக்க மாட்டாது என்பதுதான் ஆய்வாளர்களின் கணிப்பு.

பெரும் வலுவோடு வரும் மொட்டுக் கட்சி சிறுபான்மையினரான தமிழ்ப் பேசும் மக்களின் – தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் – உரிமைகள், அபிலாஷைகளை நிராகரித்து வலுவிழக்கச் செய்யம் நடவடிக்கைகளை நாடாளுமன்றச் செயற்பாடுகள் மூலம் நிச்சயம் முன்னெடுக்கும்.

ஆளும் கட்சியாக வரக் கூடிய மொட்டுக் கட்சித் தரப்பில் அத்தகைய பேரினவாத மேலாதிக்க வெறிப் போக்குச் சக்திகளே நாடாளுமன்றுக்குள் நுழையும் சூழல் பெரும்பாலும் தென்படுகின்றது.

வலிமையான நாடாளுமன்றப் பலத்தோடு இத் தரப்புகள் சிறுபான்மையினரை ஒடுக்கும் நடவடிக்கைகளை நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கும் போது, அதனை எதிர்கொள்வதற்குத் தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மைத் தரப்பின் வெறும் நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை ஈடுகொடுத்து உதவப் போவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆளுமை, அறிவு, சொல்லாடல் திறமை, நாடாளுமன்றுக்கு வெளியில் இராஜதந்திரிகளையும் சர்வதேசத் தரப்புகளையும் கையாளும் வலிமை போன்றவைதான் பெரிதும் கைகொடுக்கும். கைகொடுக்க முடியும்.

துரதிஷ்டவசமாக அத்தகைய ஆளுமையும், தகுதியும், திறமையும் உள்ள வேட்பாளர்களை தமிழர் தரப்பு களத்தில் பெரும்பாலும் நிறுத்தவில்லை என்பதுதான் வேதனைக்குரிய உண்மையாகும்.

# ஐ.தே.கவுக்கும் ஐ.ம.சவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை!

### ரணில் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பரப்புரைக் கூட்டமொன்றில் தன்னால் நிகழ்த்தப்பட்ட உரையின் ஒரு சிறுபகுதி காணொலியைத் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவேற்றித் தாம் விடுத்திருக்கும் செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாரு:–

ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் உள்ளடங்கலாக குறித்தவொரு பிரிவினரால் உருவாக்கப்பட்டதும், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுமான தனியானதொரு கட்சி என்று நீதிமன்றத் தீர்ப்பில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இந்தநிலையில், சிலர் இன்னமும் தம்மை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதுடன், இந்தத் தீர்ப்பை அவர்கள் எந்த நீதிமன்றத்திற்குச் சென்றாலும் மாற்றியமைக்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சிலர் அரசை விமர்சிப்பதை விடுத்து ஐக்கிய தேசியக் கட்சியையும் விமர்சிக்கின்றார்கள். எம்மை விமர்சிப்பதென்பது அவர்கள் அரசுக்குச் செய்கின்ற உதவியாகவே அமையும்.

அதேபோன்று மேலும் சிலர் தாம் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் என்றும், இந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பொதுத்தேர்தலில் போட்டியிடத் தமக்கு அனுமதி கிடைத்திருக்கின்றது என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறு கூறுகின்றவர்கள் எமக்கு எதிராக நீதிமன்றத்துக்கும் சென்றார்கள். எனினும், அனைத்து நீதிமன்றங்களும் அவர்களுக்கு ஒரே தீர்ப்பையே வழங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு, அதன் ஒரு கூட்டிணைவாக ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது – என்று தெரிவித்துள்ளார்.

# யாழ்.தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்க விசேட அதிகாரி

### திரும்பிச் சென்ற அதிகாரிக்குப் பதிலாக வெறொருவரை நியமித்தது ஆணைக்குழு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் , ஜுலை 28

யாழ். மாவட்ட செயலகத்தின் நடவடிக்கைகளைக்கண்காணிப்பதற்காகதேர்தல்ஆணைக் குழுவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட விசேட அதிகாரி தொடர்பில் முன்னாள் முதலமைச்சர் எழுப்பிய சந்தேகத்தை அடுத்து அவர் திரும்பிச் சென்றிருந்தார். அந்த அதிகாரியின் இடத்துக்கு வடக்கு மாகாணப் பிரதித் தேர்தல் ஆணையாளர் லலித் ஆனந்தாவை விசேடமாக நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. .

யாழ். குடாநாட்டில் உயர் பதவிகளில் இருக்கும் இரு முக்கிய அதிகாரிகள் ஓர் அரசியல் கட்சியின் வேட்பாளருக்குச் சார்பாக செயலகத்தின் பல தகவல்களையும் வழங்குவதோடு அந்தக் கட்சியால் மேற்கொள்ளப்படும் முறைகேடுகள் தொடர்பிலும் கண்டுகொள்வது கிடையாது என சில அரசியல் கட்சிகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு சென்றன.

இதனை ஆராய்ந்த ஆணைக்குழு முன்னாள் உதவித் தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓர் அதிகாரியை யாழ்ப்பாணத்துக்கென விசேடமாக நியமித்து யாழ்ப்பாணம் அனுப்பியது. முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனும் அவரது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் விசேடமாக நியமிக்கப்பட்ட அதிகாரி தொடர்பில் பகிரங்கமாக சந்தேகம் எழுப் பியதோடு பத்திரிகைகளிலும் அது பற்றி செய்திகள் வெளிவந்தன.

இதனால் தாம் அவதூறு கேட்க விரும்பவில்லை எனத் தெரிவித்து அந்த அதிகாரி கொழும்பு திரும்பியதோடு யாழ்ப்பாணத்தில் பணியாற்ற மறுப்பும் தெரிவித்தார்.

இருப்பினும் குடாநாட்டில் காணப்படும் நெருக்கடி காரணமாக தற்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் வடக்கு மாகாணப் பிரதித் தேர்தல் ஆணையாளர் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பணியாற்றும் வகையில் விசேட அனுமதியை ஆணைக்குழு வழங்கியுள்ளது.

### புதிய நாடாளுமன்ற அமர்வில்

# தகவல்களை உடனுக்குடன் வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 28

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையவிருக்கும் புதிய நாடாளுமன்றத் தின் சகல தகவல்களையும் நாடாளுமன்ற அமர்வு தினத்தன்றே பொதுமக் களுக்கு வழங்குவதற்கான கட்டமைப் பொன்று உருவாக்கப்படும்.

– இவ்வாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட 'நாடாளுமன்ற வித்தி' செய்தி மடல் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றக் குழுக்களின் செயற்பாடுகளை உடனடியாகவே பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் தொடர்பில் பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

அத்துடன் நடமாடும் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். நாடாளுமன்ற சம்பிர தாயங்கள், நடைமுறைகள் பற்றிய விபரங்கள் பலவற்றைத் தாங்கியதாக நாடா ளுமன்றத்தின் முதலாவது செய்தி மடலாக 'நாடாளுமன்ற வித்தி' வெளியாகியுள்ளது.

நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கடந்த ஐந்து வருடங் களில் சிறந்த நிறுவனங்களுக்கான இணையத்தளத்துக்கான விருதுகளைப் பெற்றிருக்கின்றது. இதனை மேலும் மெருகூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் – என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாட்தொகுதி பிரதானியுமான நீல் இத்தவல உள்ளிட்ட நாடாளுமன்றத் திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ‘ஒரு நாடு: இரு தேசங்கள்’

**வேந்தன்**

தமிழ்மக்களது அரசியல்பெருவெளியில் ஒரு நாடு இரு தேசங்கள் “One County two Nations என்கின்ற கருத்தியல் பற்றி பரவலாக பேசப்பட்டு வருகிறது.

இலங்கைத்தீவில்வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் மீது 1956 ஆம் ஆண்டு தொடக்கம் நேரடியாக அடக்குமுறைகள் நடைபெற்றுவந்தன. தனிச் சிங்கள சட்டம் என்றும் கல்வித்தரப்படுத்தல் என்றும் சட்டரீதியான அடக்குமுறைகள் ஊடாகத் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

தமிழ் மக்களுக்கு பாதுகாப்பற்ற நிலையும் உருவாகி மக்கள் உயிர் இழக்கின்ற நிலை ஏற்பட்டது. அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளும் அடக்குமுறை கொண்டு ஒடுக்கப்பட்டது. இந்நிலையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து தனிநாட்டுக்கான பிரகடனமாக கருதப்படுகின்ற வட்டுக்கோட்டை தீர்மானத்தை மேற்கொண்டன.

அதன் தொடர்ச்சியாக ஆயுதவழியிலான விடுதலைப் போராட்டம் நடைபெற்று அதன் முடிவில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்களையும் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை இழந்திருக்கின்றோம்.

இத்தனை இழப்புகளின் இறுதியில் தமிழ் மக்களிற்கான உரிமைப் போராட்டம் இன்னமும் தொடர்கின்றது.

அரசியல் நெறிமுறைகள் ஊடாக அதற்கான வழிகளில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார்கள்.


இதில் ’ஏக்கிய இராச்சிய’ என்ற ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை ஏற்றுக்கொள்கின்ற அரசியல் வழியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரின் அர்த்தமுள்ள அரசியல் பரவலாக்கம் என்ற நிலைப்பாட்டிற்கு மாற்று நிலைப்பாடாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் ஒரு நாடு இரு தேசங்கள் என்பதனை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர்.

இலங்கைத்தீவில் எண்ணிக்கையில் குறைவான தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டுமானால் அவர்கள் வாழ்ந்து வரும் தேசம் என்ற எண்ணக்கரு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைத்தீவில் எண்ணிக்கையில் குறைவான தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டுமானால் அவர்கள் வாழ்ந்து வரும் தேசம் என்ற எண்ணக்கரு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இந்நிலையில் உங்களிடம் இயல்பான கேள்வி ஒன்று எழலாம். தேசம் என்பதையும் நாடு என்பதையும் ஒரே அர்த்தத்துடன் அன்றாடம் பயன்படுத்தி வரும் நிலையில் இவை இரண்டிற்குமிடையிலான கருத்துநிலை வேறுபாடு என்ன என்பதே அதுவாகும். தேசம் என்ற வார்த்தையும் நாடு என்கின்ற வார்த்தையும் மாறிமாறி பயன்படுத்தி வந்தாலும் இவை இரண்டிற்கும் இடையில் கருத்தியல் வேறுபாடு உள்ளது. ஒரு நாடு என்பது சர்வதேச எல்லைகளைக் கொண்ட சட்டரீதியான ஓர் புவியியல் நிலப்பரப்பு எனலாம். இவை மற்றைய நாடுகளுடனான சர்வதேச உறவுகளையும் ஏற்றுமதி இறக்குமதிகளைக் கொண்ட சர்வதேச வர்த்தகங்களையும் கொண்டிருக்கும் சட்டரீதியான அங்கீகாரம் பெற்ற ஒன்றாகும். உலகில் ஏறத்தாழ 190 நாடுகள் காணப்படுகின்றன.

தேசம் என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வரைவிலக்கணங்கள் காணப்பட்டாலும் கூட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின்படி ஒரு இனம் தனக்கென தனியான மொழி, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வேறுபடுத்திக் காட்டக்கூடிய தனியான வரலாறு என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் குறித்த ஓர் நிலப்பகுதியில் பெரும்பான்மையாக வாழ்ந்து வருவார்கள் ஆயின் அவர்களை தேசம் (Nation) என அங்கீகரிக்க முடியும். இங்குள்ள மயக்க நிலை என்னவென் றால் தேசம் (Nation) என்பதை தனிநாடு என பலர் தவறாக அர்த்தப்படுத்திக்கொள்வதுண்டு. தேசம் என்பது தனிநாடல்ல. தேசம் என்பது மேற்கூறப் பட்ட பண்புகளைக் கொண்ட ஓர் தேசிய இனத்திற்கான அரசியல் அங்கீகாரம் மட்டுமே.




தேசம் என்கின்ற அரசியல் அங்கீகாரத்துக்கான முக்கியத்துவம் என்ன? ஏன் இந்த அரசியல் அங்கீகாரம் வேண்டும்? – எனக் கேட்டால் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்ட இனம் தனது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளை முன்வைக்க முடியும். ஆக தமிழர்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் தமிழ் மக்கள் ஓர் தேசமாக அங்கீகரிக்கப்படவேண்டும்.

அவ்வாறான அங்கீகாரம் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை பெற்றுத்தருவதற்கான அடிப்படையாக அமையும். மாறாக இலங்கை என்கின்ற ஓர் நாட்டுக்குள் தமிழ் மக்கள் வெறும் சிறுபான்மையினர் மாத்திரமே என்பதை ஏற்றுக்கொண்டு 13 ஆவது திருத்தச்சட்டம் போன்றதோர் அதிகாரப்பரவலாக்கத்தைப் பெற்றுக்கொள்வதாக இருந்தால் தமிழர்களுக்கு தேசம் என்கின்ற அங்கீகாரம் தேவையில்லை. அர்த்தம் உள்ள அதிகாரப்பரவலாக்கம் என்கின்ற நிலைப்பாடே போதுமானதாகும்.

இதில் உள்ள முக்கிய விடயங்கள் எவையாக இருக்கலாம்?

– தமிழர் தேசத்தில் மேற்கொள்ளப்படும் நிர்வாகம் அனைத்தும் தமிழர் தேசத்தின் நிர்வாக தலைமையில் நடைபெறவேண்டும்.

– கனடாவில் கியூபா உள்ளது போல, பிரித்தானியாவில் வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து உள்ளது போல தனியான நிர்வாக அலகாக தமிழர் தேசம் இருக்கவேண்டும்.

– சிங்கள தேசத்தின் இருப்பையும் அதன் வரலாற்றையும் ஏற்றுக்கொள்வதுபோல தமிழர் தேசத்தின் இருப்பையும் வரலாற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

– தமிழர் நிலங்கள், தமிழர் கலை, தமிழர் பண்பாடு, தமிழர் பொருளாதாரம், தமிழர் கல்வி பாதுகாக்கப்படவேண்டுமானால் தமிழர் தேசத்திற்கான அங்கீகாரம் வழங்கப்படவேண்டும்.

– தமிழர்களது இருப்பும் பாதுகாப்பும் பாதிக்கப்படும் இடத்து, சர்வசன வாக்கெடுப்பு நடத்தித் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமையும் இறைமையும் கொண்டவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

தமிழர்கள் தொடர்ச்சியாக பேரினவாத அரசுகளால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுவருவதைக் கவனத்திற் கொண்டும் பெருமளவான மக்களை இழந்த நிலையிலும் தமிழர்களுக்கான பாதுகாப் பான நீடித்து நிற்கின்ற ஒரு தீர்வைத் தேடுவது தமிழர்கள் அனைவரதும் கடமையாகும்.

நன்றி: – ‘துவியம்’ இணையம்.

## வவுனியாவில் ரிஷாத் - மஸ்தான் ஆதரவாளர்களிடையே மோதல்!

வவுனியா, ஜூலை 28

வவுனியா சாளம்பைக்குளம் பகுதியில் நேற்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வேட்பாளர்களுமான ரிஷாத் பதியூதீன் மற்றும் மஸ்தான் ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு இடையே இடம் பெற்ற மோதலில் 4பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் சாளம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த மஸ்தானின் ஆதரவாளர்கள், செட்டிகுளம் மனிக்பாம் பகுதியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டுச் சாளம்பைக்குளம் பகுதியில் ஒருவரைச் சந்திப்பதற்காக அவரது வீட்டுக்குச் சென்றிருந்தோம்.

இதன்போது அங்குவந்த முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் ஆதரவாளர்கள் எம் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் எமது ஆதரவாளர்கள் 6 பேர் காயமடைந்துள்ளமையுடன், தமது வாகனங்களின் கண்ணாடிகளும் உடைக்கப்பட்டன - என்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த ரிஷாத் பதியூதீனின் ஆதரவாளர்கள், எமது கிராமத்தில் அரசியல்வாதிகளின் சுவரொட்டிகள் எவையும் ஒட்டுவதற்கு நாம் அனுமதிப்பதில்லை. இது கிராமத்தில் வசிக்கும் பெரும்பான்மையான மக்களின் முடிவாக இருக்கும் நிலையில், மஸ்தானின் ஆதரவாளர்கள் கிராமத்துக்குள் வந்து சுவரொட்டிகளை ஒட்ட முனைந்தனர். அதனை தடுக்க முற்பட்டபோது எம் மீது தாக்குதல் மேற்கொண்டனர் - எனத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தால் இரண்டு தரப்பின் ஆதரவாளர்களும் சாளம்பைக்குளம் பகுதியில் ஒன்று கூடினர். இதனால் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது. சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா உதவி



பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பூவரசங்குளம் பொலிஸார், விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தமையுடன் குழப்ப நிலையைக் கட்டுப்படுத்தினர்.

இரவு 12 மணிக்கு பின்னர் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதுடன், விசேட அதிரடிப் படையினர் மற்றும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் சாளம்பைக்குளம் பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

### ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த

## 115 உறுப்பினர்களை தூக்கி வீசியது ஐ.தே.க.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கியுள்ள தமது கட்சி உறுப்பினர்கள் 115 பேரை கட்சி உறுப்புரிமையிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று நடைபெற்றது.

இதன்போதே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிடும் 54 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பரப்புரைக்கு ஒத்துழைப்பு வழங்கும் 61 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களையும் நீக்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் அவர்கள் அவர்கள் அப்பதவியை இழக்க வேண்டிநேரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இயற்கையைக் கொலை செய்யும் சமூகம்

## அழிவடையும் இயற்கையைப் பாதுகாப்போம்

**உலக இயற்கைப் பாதுகாப்பு தினம் ஜூலை 28**

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்
சமூகவியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்



ஆண்டுதோறும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி இயற்கைப் பாதுகாப்புத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உலகிலுள்ள இயற்கையைப் பாதுகாப்பதற்காக பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கம் 1948 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

தற்கால உலகில் சூழல் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றமை நாம் யாவரும் அறிந்த உண்மையே. அதனால் ஏற்பட்டிருக்கும் சவாலை உலகம் எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது. இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்மைப் பாதுகாக்கும் என்கின்ற தொனிப்பொருளில் இத் தினம் கொண்டாடப்படுகின்றது.

இயற்கை என்பது மனிதனால் உருவாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மலை, காடு, நீர்) பொருள் அல்லது தானாகவே தோன்றும் சக்தி (மழை, காற்று, இடி) என கூறலாம். எண்ணிடலங்கா உயிரினத் தொகுதியைக் கொண்டதாக இயற்கை விளங்குகின்றது. மரங்கள், செடிகள், கொடிகள், விலங்குகள், பறவைகள், மனிதர்கள், நுண்ணங்கிகள் போன்ற பல உயிரினங்கள் இயற்கையுடனேயே இணைந்து தமது வாழ்க்கையை நடாத்துகின்றன. இயற்கை இன்றி எந்தவொரு உயிரியாலும் வாழ முடியாது என்பது நிதர்சனமான உண்மை.

இயற்கையில் உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகள் காணப்படுகின்றன. இவற்றினை வைத்துக் கொண்டு இயற்கை வளங்கள் பெரும்பாலும் புதுப்பிக்கக்கூடிய வளங்கள், புதுப்பிக்க முடியாத வளங்கள் என பெருவாரியாக வகுக்கப்படுகின்றன. பயன்படுத்தல் காரணமாக குறைவுபடுத்தலுக்கு உட்பட்டாலும், உடனடியாக அல்லது குறுகிய காலப்பகுதியில் மீள உருவாக்கக்கூடிய வளங்கள் (நிலம், நீர், வளி, சூரிய ஒளி, விலங்குகள், தாவரங்கள்) புதுப்பிக்கக்கூடிய வளம் எனவும், புவியில் நீண்ட காலத்தில் தோற்றம் பெற்றவையாகவும், பயன்படுத்தப்படுமானால் அல்லது அழிக்கப்படுமானால் இலகுவில் புதுப்பித்துக்கொள்ள முடியாத



வளங்கள் (நிலக்கரி, பெற்றோல், இரும்பு, அலுமினியம் போன்ற பல கனிமங்கள்) புதுப்பிக்க முடியாத வளங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

ஆரம்ப காலங்களில் உயிரினங்களின் முதன்மையானவனாகப் போற்றப்படுகின்ற மனிதனுடைய அறிவு விருத்தியானது மந்தமான நிலையில் காணப்பட்டதால் இயற்கை எந்தவிதமான பாதிப்பையும் எதிர்கொள்ளவில்லை. ஆனால் மனிதனுடைய அறிவு, சிந்தனை படிப்படியாக வளர்ச்சியடைந்த போது இயற்கையானது பல்வேறு வகைகளிலும் அழிவையும், பாதிப்பையும் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. சமூகத்தில் மக்கள் கூட்டம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கிய போது தேவை என்ற விடயம் அதிகரிக்கின்றது. இதனால் மனிதனுக்கும் இயற்கையுடனான உறவு அல்லது தொடர்பு அதிகமாக வலுப்பெறுகின்றது. சிந்தனை என்கின்ற அம்சத்தில் ஏனைய உயிரிகளிடமிருந்து வேறுபடுகின்ற மனிதன் தனது அடிப்படைத் வேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றை இயற்கையின் மூலமே பூர்த்தி செய்து கொள்கின்றான். இயற்கை மனிதர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதைவிட, மனிதன் இயற்கையிடமிருந்து பெற்றுக் கொள்கின்ற பயன் அதிகமாகும்.

இயற்கையிலிருந்து தனது தேவைகளைப் பெற்றுக் கொண்ட மனிதன், வளர்ச்சியடைந்த மற்றும் மேம்பட்ட தொழிநுட்பம் கொண்ட உலகமயமாதல் சூழலில் இயற்கையைத் தன் வடிவில் இருந்து மாற்றத் தொடங்கினான். இயற்கையாக காணப்படுகின்ற பொருள்களைக் கொண்டு மாற்று இரசாயனக் கண்டுபிடிப்புக்களைக் மேம்படுத்தத் தொடங்கினான். இச் செயற்பாட்டினால் இயற்கை வளங்கள் அனைத்தும் பாதிப்படைந்து வருகின்றன. பெருகிவரும் மக்கள் தொகைப்பெருகத்திற்கு ஏற்பத் தேவைகளும் அதிகரிக்கத் தொடங்கின.



உணவு உற்பத்தியைப் பெருக்குதல், வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல், வாழிடங்களின் வசதியை உருவாக்குதல் போன்ற பல காரணங்களினால் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டது. மனித உழைப்பைத் தவிர்த்து, இயற்கை வளங்கள் மற்றும் இயந்திரங்களின் துணைகொண்டு நடக்கின்ற புரட்சியில் இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு விரிசலடைந்தது. மனிதனின் பேராசையினால் காடுகளை அழிப்பது, நீர்நிலைகளின் மீது ஆதிக்கம் செலுத்துவது, நிலக்கரி, பெற்றோல் போன்ற எரிபொருள்களை எரிப்பது, பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவது போன்றவற்றால் பல இழப்புக்களை இயற்கை சந்தித்து வருகின்றது.

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களை வழங்குகின்ற இயற்கை வளங்களும், மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்து துணை புரியும் காட்டு வளங்களும் இன்று பல்வேறு வழிகளிலும் சிதைக்கப்படுகின்றன. மனிதர்கள் பொருளாதாரத் தேவைகளுக்காக அதிக அளவு இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்றனர். பொருளாதார வளர்ச்சிக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப காட்டு விளைபொருள்கள் மற்றும் நிலத்தின் தேவை அதிகரிக்கின்றது. இதனால் காட்டு வளம் வேகமாக அழிவடைந்து வருகின்றது.

இதேபோன்று அத்தியாவசிய நீர் வளமும் அழிக்கப்படுகின்றது. மனிதனுக்குத் தேவையான நீர்த் தேவைகள் அதிகரித்துள்ள சூழ்நிலையில் வளர்ந்து வரும் தொழிற்சாலைகள், வேளாண்மைத் தொழில் எனப் பலவற்றிற்காக நீரின் பயன்பாடு உயர்ந்து வருகின்றது. தொழிற்சாலைகள், நகர மக்கள் பயன்படுத்தும் நீர் சுத்திகரிக்கப்படாமல் தூய நீருடன் கலப்பதால் அசுத்த நீரின் அளவு அதிகரிக்கின்றது.

மண் வளமும் பெரிதும் அழிவடைந்து கொண்டு செல்கின்றது. நதிப்படுக்கைகளில் புரளும் மணல்களை தொழில் துறைக்குப் பயன்படுத்தும் போக்கு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அளவிற்கு அதிகமான மணல் அகழ்வு, நீர்ப்பிடிப்பு அற்று நீரைத் தேக்கி வைக்கும் நிலையை ஆறுகள் இழந்து விடுகின்றன. அதனால் வேளாண்மைக்குத் தேவையான நீரின் அளவு குறைவடையத் தொடங் கியுள்ளது. நீர் நிலைகளில் இன்று மணல் மட்டுமே மிஞ்சியிருக்கின்றது. இதனையும் விட்டு வைக்காமல் வியாபார போக்குடன் மணல் ஏற்றும் நடவடிக்கையினால் அது அழிக்கப்படுகின்றது.

அதேபோன்று காற்று வளமானது பரந்தளவில் அழிவடைந்து கொண்டு வருவதனை காணலாம். வற்றாத இயற்கை வளமான காற்றில் வள மான ஒட்சிசன், நைதரசன், காபனீரொக்சைட், ஹைட்ரஜன் போன்ற பல வாயுக்கள் தங்கியுள்ளன. காடுகளை அழித்தல், வாகனப்புகை, தொழிற்சாலைப் புகை போன்ற நடவடிக்கை கார ணமாக காற்று மாசுபடுகின்றது. காபனீரொக்சைட், நைதரசன் போன்ற நச்சு வாயுக்களின் அடர்த்தி வளியில் அதிகரிப்பதால் பருவநிலை மாற்றங்கள் ஏற்பட் டுப் பேரழிவுகள் நேர்கின்றன.

நிலத்தினுடைய வளம் இழக்கப்படுகின்றது. நமது முன் னோர்கள் காடுகளை, தரிசு நிலங்களை கழனியாக்கி உணவுத்தேவையை நிறைவு செய்து வந்தனர். மரபு வழியான இவ் வேளாண்மை உற்பத்தி நமது மண்ணின் தன்மைக்கும் நில அமைப்பிற்கும் ஏற்றதாக அமைந் திருந்தது. உலகமயமாதலால் வேளாண்மைத்துறை பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு மானியங்கள் ஒதுக்கீடு செய்வதைத் தவிர்த்து பிறதொழில்களுக்கு வெகுவாக நிதி குவிக்கப்படுகின்றது. வேளாண்மை உற்பத்தி குறைவடைவதுடன் விளைநிலங்களின் அதிகரிப்பு நிகழாமல் போகின்றது. இவ்வாறு பல இயற்கை வளங்கள் தற்காலத்தில் அழிவடைந்து கொண்டு வருகின்றன.

எனவே மனிதனுடைய செயற்பாடுகள் இயற்கையில் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மனிதன் தனது வாழ்வியலை மேம்படுத்தும் நோக்



கில் மேற்கொள்கின்ற ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பல்வேறு தொழிநுட்பங்களைப் பயன்படுத்துகின்றான். இவ்வாறான நடவடிக்கைகளால் சுனாமி, எரிமலை வெடிப்பு, வெள்ளம், வரட்சி, அமிலமழைப்பொழிவு, ஓசோன்படைச் சிதைவு, நில, நீர், வளி மாசடைதல் மற்றும் வாகன விபத்து முதலான அனர்த்தங்கள் உருவாகின்றன. இவை மனிதனுக்கு நீண்டகால மற் றும் குறுகிய கால பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இயற்கையில் காணப்படும் ஒவ்வொரு வளமும்தான் மனித வாழ்க்கையினைத் தீர்மானிக்கும் காரணியாகும். இவை தமக்குரிய விகிதாசாரம் அல்லது அளவுகளில் சரியாக இருக்கும் போதுதான் மனித வாழ்வு நீடித்து நிலைக்கின்றது. மாறாக அளவு மாறுபடும் போது அது மனித வாழ்வை நிலைகுலைக்கின்றது. ஆகவே இயற்கை வளங்கள் அழிவடைவதைப் பாதுகாத்து எதிர்கால சந்தியினருக்கு கையளிப்பது சமூகத்தினராகிய எமது கடமையாகும்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்தார் சுவிஸ் தூதுவர்

**(அப்துல்சலாம் யாசீம்)**

சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஹன்ஸ்பீட்டர் மொக் இன்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

கிழக்கு மாகாண ஆளுனர் செயலகத்துக்கு வருகை தந்த அவர், அங்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடியமையோடு, குறிப்பாக விவசாயம், கல்வி அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறையினை விருத்தி செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

## புல்மோட்டையில் கடுங்காற்று, அடை மழையினால்

# அறுவடைக்கு தயாராக இருந்த 1200 ஏக்கர் சிறுபோக வேளாண்மை நீரில் மூழ்கிப் பாதிப்பு

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

திருகோணமலை, ஜுலை 28

திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை பகுதியில், கரையான் பிலவு மற்றும் ஐயாத்தை போன்ற விவசாய சம்மேளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட 1200மேற்பட்ட ஏக்கர்வேளாண்மை, அறுவடைக்கு தயாரான நிலையில் கடும் காற்றினாலும் தற்போது பெய்த அடைமழை காரணமாகவும் நீரில் மூழ்கிய நிலையில கைவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் நேற்று மாலை 5.00 தொடக்கம் இன்று காலை வரை கடும் காற்றுடன் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இதில் கரையான் பிலவு விவசாய சம்மேளனத்தின் கீழ் 650 ஏக்கரும், ஐயாத்தை விவசாய சம்மேளனத்தின் கீழ் 450 ஏக்கரும் சிறுபோகத்திற்கான வேளாண்மை செய்கை நீரில் முழ்கி பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நேற்று அடம்படிப்பேட்டை விவசாய சம்மேளனத்தின் கீழ் உள்ள சுமார் 250 ஏக்கர் வேளாண்மை அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மிகவும் பாதிக்கப்பட்டு கைவிடப்பட்ட விவசாய நிலங்களை விவசாய திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்றும் பார்வையிட்டுள்ளமையுடன் இன்று காலையும் ஏனைய பகுதிகளை பார்வையிடுவதற்கும் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றனர் எனவும் கரையான் பிலவு விவசாய சம்மேளனத்தின் தலைவர் எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.

# ஜோர்தானில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு!



ஜோர்தானில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கையர்கள் மீது அந்த நாட்டின் பாதுகாப்பு படையினர் கண்ணீர்ப் புகை பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

கொரோனா காரணமாக தொழிலை இழந்த நிலையில், இலங்கை பணியாளர்கள் சிலர் ஜோர்தானில் சிக்கியுள்ளனர்.

தம்மை இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு அவர்கள் கோரி வரும் நிலையில், இந்த விடயம் தொடர்பாக இலங்கைத் தூதரக அதிகாரிகள் சிலர் பணியாளர்களுடன் கலந்துரையாடச் சென்றுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரச்சினைக்கு உரிய தீர்வொன்றை வழங்கவில்லை எனத் தெரிவித்து பணியாளர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கிட்டத்தட்ட 340 இலங்கை தொழிலாளர்கள் அதிகா ரிகளைச் சுற்றி வளைத்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, ஏற்பட்ட அமைதியின்மையைக்கட்டுப்படுத்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கையர்கள் மீது அந்த நாட்டின் பாதுகாப்புப் படையினர்கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடக செய்தித் தொடர்பாளர் மங்கள ராண்டேனியா, தொற்று நோயால் வேலை இழந்து ஐந்து மாதங்களுக்கும் மேலாக தாங்கள் விடுதிகளில் சிக்கியிருப்பதால் தொழிலாளர்கள் தாங்கள் எதிர் கொள்ளும் சிரமங்களை தூதரக அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறும் போது ஒரு தவறான புரிதலின் விளைவாக பதற்றமான நிலைமை ஏற்பட்டதாக தெரிவித்தார்.

மேலும் இலங்கைத் தொழிலாளர்களின் தவறான நடத்தை காரணமாக எழுந்த நிலைமையைக் கட்டுப்படுத்த கண்ணீர்ப் புகை தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

# கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்களை தமிழ் மக்கள் ஒரு போதுமே ஏற்க மாட்டார்கள்

## இப்படிக் கூறுகின்றார் ஞானமுத்து சிறிநேசன்



தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்களை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை இந்த தேர்தலில் நிருபித்துக் காட்டவேண்டும் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஞானமுத்து சிறிநேசன் எம் இனத்தை அழித்தவர்களுக்கு தோள் கொடுத்து அவர்களின் தரகர்களாக வருபவர்களுக்கு இந்த தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உரிமையில்லாத அபிவிருத்தி அத்திவாரமில்லாத கட்டடம் போன்றது. உரிமையுடன் கூடிய அபிவிருத்தியே தமிழ் மக்களுக்கு தேவை என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஞானமுத்து சிறிநேசன் பன்குடாவெளி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு – ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகத் தமிழ் வாக்குகளைப் பிரிப்பதற்கு ஆறு குழுக்களாகப் போட்டியிடுகிறார்கள். இவர்கள் 50 ஆயிரம் தமிழ் வாக்குகளை வீணாக்கப் போகிறார்கள். எவரும் வெற்றிபெறப்போவதில்லை.

அழிக்கப்பட்ட மக்களுக்காக பேசுகின்றோம், ஒழிக்கப்பட்ட மக்களுக்காகப் பேசுகின்றோம் என கூறியவர்கள் தற்போது அழித்தவர்களின் முகவர்களாக தோள்கொடுத்து எம்மத்தியில் வருகிறார்கள். அவர்களுக்கு இந்த தேர்தலில் சரியான பாடம் புகட்ட வேண்டும். அவர்களின் பின்னால் விடயங்களை அறியாத சில கூட்டம் திரிகிறார்கள். நாளை அவர்களின நிலை என்னவென்று அவர்களுக்குத் தெரியாது.

அன்புக்குரிய தங்கேஸ்வரி அக்கா தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் போது 46 ஆயிரம் வாக்குகளைப் பெற்றார். அவர் கட்சி மாறியதால் 1500 க்கும் குறைவான வாக்குகளே பெற்றார். அக்காவுக்கு 2010ஆம் ஆண்டு பாடம் புகட்டிய மக்கள் தேர்தலில் வெற்றி பெற்றுக் கட்சி தாவிய தம்பிக்கு இந்த தேர்தலில் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

அரசியல் உரிமைகள் இல்லாத அபிவிருத்தி எமது மக்களை ஏமாற்றும் செயலாகவே காணப்படுகிறது. அரசியல் உரிமையை நாங்கள் கேட்கின்றோம். சிங்கள அரசாங்கங்கள் இல்லையென மறுப்பதற்காக நாங்கள் அதிலிருந்து ஒதுங்க மாட்டோம்.

எங்களுக்கு அரசியல் தீர்வு வழங்காமல் ஏமாற்றியவர்கள் போராட்டத்தை சிதைத்தவர்கள், எமது பிள்ளைகளைக் கடத்தியவர்கள், காணாமல் ஆக்கியவர்கள், புத்திஜீவிகளைச் சுட்டுக்கொன்றவர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்களை வெலிக்கந்தையில் வைத்துக் கடத்தி கொன்றவர்கள் எல்லாம் எதுவுமே செய்யாத நல்லவர்களைப் போன்று எமது மக்களிடம் வருகின்றார்கள். அவர்கள் தொடர்பாக எமது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

பிழைப்பதற்காக, உழைப்பதற்காக அரசியல் செய்ய வந்தவர்கள் கடந்த காலங்களில் நன்றாக உழைத்துவிட்டார்கள். ஒன்றுமே இல்லாமல் வந்தவர்கள் கோடிக்கணக்கில் சொத்து சேர்த்துவிட்டார்கள். –என்றார்.

# விபத்தைக் கட்டுப்படுத்த விசேட வேலைத் திட்டம்

நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனப் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் தாம் மோட்டார்போக்குவரத்து திணைக்கள ஆணையாளருக்குஉரியபணிப்புரைகளை வழங்கியுள்ளார் எனவும், அதற்கிணங்க நாட்டின் அனைத்து சாரதி பயிற்சி பாடசாலைகள் தொடர்பில் கண்காணிப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சாரதிகளின் முறையான பயிற்சிகள் இல்லாத காரணத்தாலேயே நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதனை முறைப்படுத்தும் முறையான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

நாட்டில் 538 சாரதி பயிற்சிப் பாடசாலைகள் இயங்குகின்றன. இந்தநிலையில் அந்தப் பாடசாலைகள் எந்தவொரு முறையான நியதிகளையும் கொண்டிருக்கவில்லை. மேற்படி பாடசாலைகள் முறையான சாரதி பயிற்சிகளை மேற்கொள்ள முன்னரே சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொடுக்கின்றன.

அதற்கிணங்க மேற்படி சாரதி பயிற்சிப் பாடசாலைகளில் சேவையிலுள்ள ஆலோசகர்களுக்கு முறையான தெளிவூட்டல்களை வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். அது தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது – என்றார்.

# காட்டு யானை தாக்கிய விரிவுரையாளருக்கு அறுவை சிகிச்சை

கிளிநொச்சியில் கடந்த 19 ஆம் திகதி இரவு காட்டு யானையின் தாக்குதலில் காயமடைந்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இருந்து, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த யாழ் பல்கலைக்கழகத்தின் பெண் விரிவுரையாளருக்கு நேற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காயத்ரி தில்ருக்ஷி என்ற களனியில் வசிக்கும் 32 வயதுடைய பெண் விரிவுரையாளரே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் இணைந்த கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பிரிவில் விரிவுரையாளராக இவர் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமரின் மத விவகார இணைப்புச் செயலர் யாழ் ஆயரை யாழ் நகரில் இன்று சந்தித்தார்





யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளர் வண பிதா எஸ்.சந்திரகுமார் இன்று காலை ஆயர் இல்லத்திலு சந்தித்து ஆசி பெற்றார். அத்தோடு யாழ்பாணத்தின் சமகால நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் மத விவகாரங்களுக்கான அமைச்சு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் உள்ள நிலையில் மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கும் நடவடிக்கையாக நேற்றையதினம் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது

இந்தச் சந்திப்பின் பின் யாழ்மாவட்ட மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் –

மதங்களுக்கிடையே ஒற்றுமை வளர்க்கப்படவேண்டும். வடக்கில் மக்கள் படுகின்ற துன்பங்களைப் பிரதமருக்கு தெரியப்படுத்துமாறு கூறியுள்ளேன்.

வடக்கில் உள்ள முக்கியமான பிரச்சினையாக இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் அத்தோடு கல்வி தொடர்பான விடயங்களிலும் முன்னேற்றம் ஏற்படுத்தவேண்டும்.

அத்தோடு மீன்பிடி, விவசாயத்தில் கவனம் செலுத்தி முன்னேற்றங்களை மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விடயத்தைப் பிரதமருக்கு தெரியப்படுத்துமாறு மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரிடம் கோரியுள்ளேன்.– என்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவரங்களுக்கான இணைப்பு செயலாளர் வண பிதா எஸ்.சந்திரகுமார் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது –

யாழ் மறைமாவட்ட ஆயர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரியப்படுத்துமாறு சில கோரிக்கைகளை என்னிடம் முன்வைத்துள்ளார்

இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வேண்டும், கல்வியில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பன போன்ற பல்வேறுபட்ட கோரிக்கைகளை என்னிடம் கூறியுள்ளார். அனைத்து விடயங்களையும் நான் பிரதமரிடம் எடுத்துரைப்பேன். – என்றார்

# கோட்டாவை எதிர்க்கத் திராணியற்ற கோழைகளுக்காக உங்கள் வாக்கு?

## விக்கி,கஜேந்திரகுமார் தரப்பினர்களை கடுமையாகச் சாடுகின்றார் சரவணபவன்



ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்க்கத் திராணியற்று கோழைகள் போன்று ஒளிந்து ஓடிய விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கா நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள்? அல்லது கோட்டாபயவை நேரடியாக எதிர்த்து, அவரைத் தோற்கடிக்க தமிழ் மக்களை அணி திரட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கா நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள்?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் வேட்பாளருமான ஈ.சரவணபவன்.

மூளாயில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. கோட்டாபய ராஜபக்ஷவும் அவரை எதிர்த்து சஜித் பிரேமதாஸவும் களமிறங்கியிருந்தனர். இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் எத்தகைய நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்தது. ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஓரணியில் வாக்களித்து சுமார் 4 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வடக்கில் கோட்டாபயவை தோற்கடித்தனர்.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு 10 ஆண்டுகள் காத்திருந்து ஜனநாயகப் பதிலடியை, நெத்தியடியாகக் கொடுத்தனர்.

கோட்டாபயவை எதிர்க்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகத்துணிவாக எடுத்தது. அதை நடைமுறைப்படுத்த முழு வீச்சில் முயற்சி செய்தது.

ஆனால், சி.வி.விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனாதிபதித் தேர்தலின் போது என்ன செய்தார்கள்? மக்களே 8 மாதங்களுக்கு முன்னர் நடந்ததை மறந்து விட்டீர்களா? இவர்கள் ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களை வழிகாட்டுவதற்குப் பதிலாக, கோட்டாவை நேருக்கு நேர் எதிர்ப்பதற்கு துணிவில்லாமல் ஓடி ஒளிந்ததை மறந்து விட்டீர்களா?

தேர்தலில் ஒருவரை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் வழமை. இல்லை தேர்தலைப் புறக்கணிக்கலாம். தேர்தல் புறக்கணிப்புக் கூட ஒரு தரப்புக்கு மறைமுக ஆதரவை வழங்கும் நிலைமையாகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காணப்பட்டது. இதைத் தெரிந்து கொண்டும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிரங்கமாக அறிவித்தது. தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பது தமக்குத் தாமே மண் அள்ளி தலையில் கொட்டிக் கொள்வதற்குச் சமனானது.

மறுபுறம் விக்னேஸ்வரனோ, மக்கள் விரும்பியவாறு வாக்களிக்கலாம் என்று ஓடும் நீரில் நழுவும் மீன் போல், கோட்டாவை எதிர்ப்பதிலிருந்து நழுவிக் கொண்டார். ஒரு தலைவன் என்பவன், மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கூட மஹிந்த ராஜபக்ஷவுக்கு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 76 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன. ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு 23 ஆயிரம் வாக்குகளே கிடைத்தன. அந்தளவு தூரம் தமிழ் மக்கள் கோட்டாபயவை நிராகரிக்க வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தார்கள். தமிழ் மக்களின் மனநிலையை அறியாது, அவர்களைப் பாழ் கிணற்றிலே தள்ளிவிட நினைத்த விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமுமா உங்கள் தெரிவு?

ராஜபக்ஷக்களின் ஆட்சி தென்னிலங்கையில் வருமாக இருந்தால் அவர்களை எதிர்க்கத் திராணியுள்ள ஒரேயொரு சக்தி இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம்தான். கோட்டாவை எதிர்க்க முடியாது புறமுதுகு காட்டி ஓடிய விக்னேஸ்வரனோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ உங்கள் தெரிவாக இருந்தால், ராஜபக்ஷக்கள் தமிழர்களின் முதுகில் ஏறிச் சவாரிதான் செய்வார்கள்.

தென்னிலங்கையில் விஸ்பரூபம் எடுத்து வரும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை மூர்க்கத்தனமாக எதிர்த்து, தமிழரைப் பாதுகாக்க கூட்டமைப்பால் மாத்திரமே முடியும்.

எங்கள் வீரமிகு போராளிகளையும், மக்களையும் பல்லாயிரக்கணக்கில் துடிக்கத் துடிக்கக் கொன்று குவித்த கோட்டாபயவை எதிர்க்கத் துணிவின்றி ஓடி ஒளித்துக்கொண்ட கோழைகளின் கூட்டத்திடம், நீங்கள் கேட்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாவை எதிர்க்கப் பயந்த நீங்கள், தமிழருக்காக நாளை துணிந்து குரல் கொடுப்பீர்கள் என்று எப்படி நம்புவது?

ராஜபக்ஷக்களின் கொட்டத்தை அடக்குவதற்கு, கோட்டாவை மறுபடியும் தோற்கடிப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை தாருங்கள் – என்றார்.

# வலி கிழக்கு பிரதேச சபையை தரமுயர்த்தி இரு சபைகள் அமையவும் வழிசமைப்பேன்!

## கூட்டமைப்பு வேட்பாளர் சுரேந்திரன் உறுதி



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினை தனது வெற்றியின் பின் தரமுயர்த்தி இரண்டாக வகுப்பதற்கு உரிய நடவடிக்கையினை முன்னெடுப்பேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலிகாமம் கிழக்கிற்கான (கோப்பாய் தொகுதிக்கான) பிரச்சாரக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஆவரங்காலில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றுகையில்–



வலிகாமம் கிழக்கு பிரதேசத்தின் வேட்பாளராக நான் உங்கள் முன் நிற்கின்றேன். எமது பிரதேசம் ஒரு பரந்த நிலப்பரப்பினைக் கொண்ட பிரதேசமாகும். 104 சதுரக் கிலோமீற்றர்களையும் 74 ஆயிரம் வரையிலான சனத்தொகையினையும் கொண்ட பிரதேசமாகும். இந்த சபையின் தலைமைப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலை இயக்கத்திடமே கையளிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற யுத்தத்தின் நிமித்தமாகவும் அரச பாரபட்சங்களாலும் எமது பகுதிகளில் பல புதிய உள்ளூராட்சி மன்றங்கள் அமைய வேண்டிய அடிப்படைகள் காணப்பட்டபோதும் அதற்கான நடவடிக்கைகள் இல்லாமல் உள்ளன. யாழில் தற்போது வேறு பல பிரதேச சபைகள் நகர சபைகளாக மாற்றமடைவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. ஆனால் எமது கோப்பாய் தொகுதிக்கென நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்மை காரணமாக மத்திய அரசில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்களில் முன்னேற்றங்கள் இல்லாமல் உள்ளது.

பல கருமங்களில் இவ்வாறான சிக்கல்கள் காணப்படுகின்றன. எமது வலிகாமம் கிழக்கு பிரதேச சபைப் பரப்பு இரண்டாக வகுக்கப்பட்டு ஒரு நகர சபையும் பிரதேச சபையும் அமையுமாக இருந்தால் எமது பிரதேசத்திற்கான ஒதுக்கீடுகளை நாம் அதிகரிக்க முடியும்.

மக்களுக்கான சேவைகளை விஸ்தரிக்க முடியும். இலகுவானதும் மேலும் திறமையுடையதுமான நிர்வாகக் கட்டமைப்பினை வலுப்படுத்திக்கொள்ள முடியும். எனவே இந்தப் பகிரங்கக் கூட்டத்தில் நான் நீர்வேலியைச் சேர்ந்தவன் என்ற வகையில் வலி காமம் கிழக்கு பிரதேசத்தின் சபை யினை இரண்டாக வகுத்து அதனைத் தரமுயர்த்தும் உத்தரவாதத் தினையும் உங்களுக்கு வழங்குகின்றேன்.– என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

# வாக்கு எண்ணும் நிலையங்கள் இராணுவப் பாதுகாப்பின் கீழ்!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்கு எண்ணும் நிலையங்கள் இராணுவப் பாதுகாப்புக்குள் இருக்கும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய வாக்கு எண்ணும் நிலையங்களை சுற்றி ஒரு கிலோமீற்றர் சுற்றாடல் வரை இராணுவப் பாதுகாப்புக்குள் கொண்டுவரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது. வாக்குப் பதிவு முடிந்ததும் அதே இரவிலேயே வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிப்பது வழமை.

ஆனால், இம் முறை ஒகஸ்ட் 6 ஆம் திகதி காலையே வாக்கு எண்ணும் பணி ஆரம்பமாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# வடக்கைச் சீரழித்த விக்கியை மக்கள் தோற்கடிக்க வேண்டும்

## கணேஸ்வரன் வேலாயுதம் வலியுறுத்து

வடக்கு மாகாண சபையைச் சீரழித்த முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும், அவர் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியையும் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

–இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் 5 வருடங்கள் தமிழர்களின் கைகளில் இருந்த போதிலும் அதனை முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் துஷ்பிரயோகப்படுத்தினார். மாகாண சபை உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்காமல் அவர் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டார். இதனால் வடக்கின் அபிவிருத்திக்கென மத்திய அரசிடமிருந்து வந்த பெருமளவு நிதிகள் திரும்பிச் சென்றன. ஒட்டுமொத்தத்தில் வடக்கு மாகாண சபையை விக்னேஸ்வரன் சீரழித்தார்.

5 வருடங்கள் முதலமைச்சர் கதிரையில் இருந்த அவர், வடக்கு மக்களுக்கென எந்தவித நன்மைகளையும் செய்யவில்லை. நூற்றுக்கணக்கான தீர்மானங்களைச் சபையில் நிறைவேற்றிய போதிலும் அவற்றில் ஒன்றைக்கூட நடைமுறைப்படுத்த வக்கில்லாதவராக அவர் இருந்தார்.



வடக்கு மாகாண சபையில் பாரிய ஊழல், மோசடிகள் இடம்பெறக் காரணகர்த்தாவாக அவர் இருந்தார். இந்த ஊழல், மோசடியால் அமைச்சரவை மாற்றப்பட்டது. ஆனால், பழைய அமைச்சரவைக்குத் தலைமை தாங்கிய விக்னேஸ்வரன், தனது முதலமைச்சர் பதவியை இராஜிநாமா செய்ய முன்வரவில்லை. பதவி ஆசையால் புதிய அமைச்சரவைக்கும் தலைமை வகித்தார்.

அவர் முதலமைச்சர் கதிரையில் இருந்த காலத்தில் புதிய கட்சியை உருவாக்குவதிலேயே குறியாக இருந்தார். அதுதான் முதலமைச்சர் பதவிக் காலம் நிறைவடைந்து மறுநாளே புதிய கட்சியை அவர் ஆரம்பித்தார்.

இன்று அவர் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்துகொண்டு யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளராகப் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றார்.

எனவே, அவரையும், அவர் தலைமையிலான கட்சியையும் யாழ்.மாவட்ட மக்கள் தோற்கடிக்க வேண்டும். – என்றார்.

## கொரோனாவிலிருந்து மீள்வதற்காக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் யாகம்









கொரோனா நோயிலிருந்து மக்களை மீட்பதற்கான வேண்டுதலாகப் பால் குட பவனியும் மகா சுதர்சன யாகமும் வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று காலை 10 மணியளவில் இடம் பெற்றுள்ளது.



ஆலய பிரதம குரு தலைமையில் இடம்பெற்ற இந்த யாகம் உலகில் இடர்கள் வருகின்ற போது இடர்களிலிருந்து மக்களைக் காக்கவேண்டியும் கிருஷ்ண பகவானின் ஆசி வேண்டியும் நடத்தப்படுவது என்பது முக்கியமானது.

இன்று இந்த மகா சுதர்சன் யாகம் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இடம் பெற்றது.

இன்று காலை 6 மணியளவில் பருத்தித்துறை கோட்டு வாசல் அம்மன் கோவிலிலிருந்து 108 பால் குடங்கள் பவனியாக வல்புர ஆழ்வார் ஆலயத்திற்கு மந்திகை ஊடாக எடுத்து வரப்பட்டு இந்த மாகா சுதர்சன யாகம் வரல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இடம்பெற்றது பெற்றது என்பது விசேட அம்சமாகும்.

## நல்லூரில் இன்று...

### காலையில்...





### மாலையில்...








படங்கள்:- பிரபாகரன் டிலக்ஷன்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2020 இல் வெளியிடப்பெற்றது.